**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**I.A.7/2025 in O.S.388/2012**

1. மாசிலாமணி,
2. சசிகுமார். ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. முருகேசன்,
2. சாமிதுரை (இறந்தார்),
3. இராஜா,
4. செந்தில்குமார்,
5. தேவி,
6. மலர்கொடி,
7. ஜெயா,
8. கீதா. ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 23.01.2026 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 மற்றும் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 4,5 எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக இம்மனுவில் பிராதினை கீழ்கண்டவாறு திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டி சி.பி.சி ஆர்டர் 6 ரூல் 16, 17 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்:**

2. இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் வாதி என்றும், 2ம் வாதிக்காகவும் அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன் என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்களது தரப்பு வாதவுரைக்கா வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்களை பொருத்து 2,3 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 04.04.2012ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரையம் செல்லாது என்றும்,

மனுதாரர்களையும் 4,5 எதிர்மனுதாரர்களையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய கோரிய பரிகாரத்திற்காக நீதிமன்ற கட்டணம் தாவாவில் மனுதாரர்களால் கட்டுப்பட்டு தாவா பரிகார பாராவில் கடந்த 04.04.2012 ம் தேதிய கிரைய ஆவணத்தை செல்லாது என விளம்புகை செய்ய கோரிய பரிகாரம் தவறுதலாக விடப்பட்டுள்ளது என்றும், மேற்படி செயல் வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாய் ஏற்பட்ட ஒன்றாகும் என்றும், எனவே இம்மனுவில் பிராதினை கீழ்கண்டவாறு திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவாக வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து அதை 3,6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்:</u>**

3. மனுதாரரின் இம்மனு அபிடவிட் விரங்கள் ஏற்புடையதல்ல என்றும், இவ்வழக்கில் இருதரப்பு விசாரணை முடிவுற்று அதன்பின் உரிய வாய்ப்பு கொடுத்து மனுதாரர் தரப்பில் எழுத்துமூல வாதவுரையும் சென்ற மாதமே தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்ய வாய்ப்பு கொடுத்து அதற்கேற்ப எதிர்மனுதாரர்கள் தரப்பில் சென்ற 07.10.2025 ல் வாதமும் செய்யப்பட்டு, கூடுதல் எழுத்துமூல வாதவுரை எதிர்மனுதாரர்கள் தரப்பில் இருப்பின் அதற்காக சென்ற 15.10.2025 தேதி மாற்றம் ஏற்பட்டது என்றும், அவ்வாறுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதத்தில் சமர்பித்த வாதங்களுக்கு பதில் வாதம் செய்யாமாலேயேயொழிய மனுதாரர் தரப்பில் பிராது Pleadings ல் விடுபட்ட சங்கதிகளை பூர்த்தி செய்யும் விதத்தில் Later thought ஆக இவ்வழக்கு தீர்ப்பு கூறப்படும் நிலையில் பிராதினை திருத்தம் செய்ய கோருவதும் அதனை அனுமதிக்க கோருவதும் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே வைக்கப்பட்ட வாதத்தை நீர்த்து போக செய்து வருவதோடு எதிர்மனுதாருக்கு ஈடு செய்ய முடியாத கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகையால் மனுதாரர்களின் மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை. சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு.</u>

6. மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்துக்களை பொருத்து 2,3 எதிர்மனுதாரர்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 04.04.2012 ம் தேதியில் எழுதிக் கொடுத்த கிரையம் செல்லாது எனவும், மனுதாரர்களையும் 4,5 எதிர்மனுதாரர்களையும் கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய கோரிய பரிகாரத்திற்காக நீதிமன்ற கட்டணம் தாவாவில் மனுதாரர்களால் கட்டுப்பட்டு தாவா பரிகார பாராவில் கடந்த 04.04.2012 ம் தேதிய கிரைய ஆவணத்தை செல்லாது என விளம்புகை செய்ய கோரிய பரிகாரம் தவறுதலாக விடப்பட்டுள்ளதாகவும், எனவே விடுபட்ட பரிகாரத்தை சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் தரப்பில் எழுத்துமூல வாதவுரையும் சென்ற மாதமே தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்ய வாய்ப்பு கொடுத்து அதற்கேற்ப எதிர்மனுதாரர்கள் தரப்பில் சென்ற 07.10.2025 ல் வாதமும் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள் பிராதினை திருத்தம் செய்ய கோருவது வழக்கை காலதாமதபடுத்தும் என வாதிட்டனர்.

8. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் மனுதாரர் கோருவதுபோல் வழக்குரையில் மேற்படி விவரங்கள் கூறப்பட்டுள்ளனவா அதற்கு நீதிமன்ற கட்டணம் கட்டப்பட்டுள்ளதா என வழக்கு கோப்பினை பரிசீலனை செய்கையில் மனுதாரர்கள்/வாதிகள் வழக்குரையில் திருத்தம் செய்ய இ.ம.எண்.227/2015 தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவில் 4,5 பிரதிவாதிகளை வழக்கில் ஓர் தரப்பினராக சேர்க்கவும் மற்றும் வழக்குரையில் இன்னும் சில திருத்தங்கள் செய்யவும் தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவில் எதிர்மனுதாரர்களால் எதிருரை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அம்மனு மனுதாரர்கள் திரும்ப பெற்றதன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பிறகு 4,5 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்க இ.ம.எண்.438/2015 தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதியாகியதன் பேரில் 4,5 பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்க உத்தரவு

ஏற்பட்டுள்ளது. அவ்வுத்தரவிற்கு பின்னிட்டு மனுதாரர்கள் திருத்தல் மனு தாக்கல் செய்யாமல் திருத்தப்பட்ட வழக்குரை மட்டுமே தாக்கல் செய்ததால் அது பலமுறை திருப்பப்பட்டுள்ளது. எனினும் கடந்த 28.07.2019 தேதியில் திருத்தல் வழக்குரை கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்குரையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இ.ம.எண்.438/2015 ன் உத்தரவுபடி மனுதாரர்கள் 4,5 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய திருத்தம் மட்டும் மேற்கொள்ளாமல் கூடுதலாக சில திருத்தல்கள் மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது.

9. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு பின்னிட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூடுதல் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என கூறியுள்ள போதிலும் அவ்வாறான கட்டணம் ஏதும் செலுத்தப்படவில்லை.

10. இவ்வாறு இருக்கையில் மனுதாரர்கள் 04.04.2012 ல் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்ய நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளதாக கூறுவதும், அதனால் மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற மனுதாரர்கள் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை.

11. **எனவே மேற்கூறிய காரணங்களுக்காக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

– இல்லை–

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.